பக்கங்கள் : 6 விலை ரூபா 5 - 00

DUPLICATE

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

### அறன் வலியுறுத்தல்

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூ உங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 31
அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 32
ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வா யெல்லாஞ் செயல். 33
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற. 34
அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்காக இயன்றது அறம். 35

யா. மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இலக்கம் 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

தீபம் : 43 மாசி - 1995 ஒளி : 11

# கூட்டுறவுக் கல்வியை விஸ்தரிக்க கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் !

— அமைச்சர் அமரசிறி தொடங்கொட —

(கொழும்பு)

கூட்டுறவு இயக்கத்தை நவீனமயப்படுத்தி நாடுபூராவும் கட்டியெழுப்புவதற்கு வசதியாக கூட்டுறவுக்கல்வியை பாடசாலைமட்டத்தில் இருந்து பல்கலைக் கழகம்வரை விஸ்தரிக்கக்கூடிய வகையில் தற்போது நடைமுறையில் உள்ள கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கூட்டுறவுத்துறை, மாகாண சபைகள், சுதேசிய ஸ்வைத்திய அமைச்சர் அமரசிறி தொடங்கொட கல்வித் திணைக்கள கூட்டுறவு ஊழியர் சங்க புலமைப் பரிசில் வழங்கும் வைபவமொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வைபவத்தில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் கூட்டுறவு சட்டவிதிகள் பழமை வாய்ந்தவை அவை மக்களுக்குப் பூரணமாக சேவையாற்றுவதற்கு போதுமானவையல்ல.

இளைய தலைமுறையினரை குறிப்பாக மாணவர்களை கூட்டுறவுத் துறையில் இணைத்து ஈடுபாடுகொள்ளச்செய்யும்வகையில் பாடசாலைமுதல் பல்கலைக் கழகம் வரை கூட்டுறவுக் கல்வியை ஒரு பாடமாகப் போதிப்பதற்கு பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்வது சம்மந்தமாக கல்வி, உயர்கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு அதற்கேற்றவகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

இவ்வைபவத்தில் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனா, மேல் மாகாணசபை கூட்டுறவு அமைச்சர் சுசில் பிரேமச்சந்திரா பேராசிரியர் விஸ்வவர்ணபாலா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கூட்டுறவு ஆணையாளர்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக திரு. சு. டிவகலாலா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சு. டிவகலாலா யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவுக் கல்வித்திட்டம்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஒன்றிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் 232 கூட்டுறவுப் பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் 34 பயிற்சி வகுப்புக்களையும், பிரதேச செயலர் மட்டத்தில் 86 பயிற்சிவகுப்புக்களையும், சங்க மட்டத்தில் 112 பயிற்சி வகுப்புக்களையும், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. இதற்கென மாவட்ட கூட்டுறவுச்சபை 2,26750 ரூபாவினை ஒதுக்கியுள்ளது

## உணவு விநி. பன்முகப்படுத்தப்படும்

அத்தியாவசிய உணவுப் பொருட்களின்விநியோகத்தை பன்முகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த காலங்களில் அத்தியாவசியசேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இவ்விநியோகத்தை மாற்றி, யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்கள் ஊடாக இவ்விநியோகம் பன்முகப் படுத்தப்படவுள்ளதாகத்தெரிவித்தார்.

## மாவட்ட அலுவலகங்களை இயங்கவைக்குக

( திருமலை )

"கூட்டுறவுத் திணைக்கள மாவட்ட அலுவலகங்களை மீண்டும் இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அலுவலர் தொழிற் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருமலை கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் தொழிற் சங்க உபதலைவர் திரு. ஆர். எ. டி. கருணரட்ணா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு அலுவலகர்களின் சம்பள உயர்வு, ஆளணித் திரட்டு பதவி உயர்வு, போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு. தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

## கொடுப்பனவில் மாற்றம்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணக் கொடுப்பனவில் மாற்றம் செய்யப்படவுள்ளது

ஐந்து அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட குடும்பங்களை தமது பகுதி கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக அங்கத்தவர்களின் விபரங்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் 5 அங்கத்தவர்களையும், 5-க்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதம் 1260/- மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## உண. திணைக்கள செயற்பாடு ஆரம்பம்

யாழ். உணவுத் திணைக்களம் பல நோ. கூ. சங்கங்களுக்கான தனது உணவு விநியோக வேலைகளை கடந்த திங்கட் கிழமைமுதல் ஆரம்பித்துள்ளதாக யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உணவுத் திணைக்களத்தின் குருநகர் களஞ்சியத்தில் இருந்து பிரதேச செயலக ரீதியாகவுள்ள குடும்பங்களின் எண்ணிக்கைக்கேற்ப பளை உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள 23 பல நோ. கூ. சங்கங்களுக்கும் இம் மா விநியோகிக்கப்பட்டுவருகிறது.

"அ," "உ" அட்டைகளுக்கு 5கிலோ வீதம் இம்மா சங்கங்களினால் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை சீனி, மற்றும் உணவுப் பொருட்களை கூ. சங்கங்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் பொருத்தமான இடத்தில் கூ. மொ. விற்பனவு நிலையத்தைத்திறப்பதற்கான ஏற்பாடுகளை தற்பொழுது கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணத்தில் கூ. மொ. விற்பனவு நிலையம் திறப்பது சம்மந்தமாக, முன்னாள் ஊழியர்களை கொழும்புக்கு அழைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## சி. க. கூ. ச. சமாசம் கடன்

யாழ் மா. சி. க. கூ. ச. சமாசம் 1993 - 1994 காலப் பகுதியில், 21634953 /- ரூபாவினை அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கியுள்ளது என தனது மேற்படி காலப்பகுதிக்கான ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுயமுயற்சி, விவசாயம், உயர்கல்வி, அபிவிருத்தி, வீடமைப்பு ஆகிய உட்பட 18வகையான கடன்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும், 1993-ம் ஆண்டில் 472675. 72 சதம் இலாபமாகப் பெறப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெதுப்பகம் திறப்பு விழாவில் பாராட்டு

மக்கள் தேவையை அறிந்து. சேவை மனப்பான்மையுடன் வெதுப்பகங்கள் இல்லாத ஒரு இடத்தில் இவ்வெதுப்பகத்தைத் திறப்பதற்கு முடிவு. செய்த சங்கானை பல நோ. கூ. சங்கத்தைப் பாராட்டுகிறேன்.

சங்கானை பல நோ., கூ. சங்கத்தின் புதிய வெதுப்பகம் ஒன்றை கொட்டைக்காட்டுக் கிளையில் திறந்துவைத்துப் பேசிய வலிமேற்கு பிரதேச செயலர் திரு. க. சந்திரராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. க. சந்திரராசா தொடர்ந்து பேசுகையில், இப்பிரதேசத்தில் மிகவிரைவில் பொதுச்சந்தை ஒன்றும் ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிவித்தார்.

இவ் விழாவில், யாழ். மா. வர்த்தகசங்கத் தலைவர் திரு. த. கோவிந்தசாமி, செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கூட்டுறவுச்சபை இயங்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட கூட்டுறவு சபையை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அதன் தலைவர் திரு எஸ். மரியாம்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தமையில் 1990ம் ஆண்டுக்குப்பின் இச்சபை இயங்கவில்லை என்றும், தற்போது அதனை இயங்கவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சபைக்கு புதிய செயலாளர் ஒருவரை நியமிக்கப்படவுள்ளதாகவும் திரு. எஸ். மரியாம்பிள்ளை தெரிவித்தார்.

## கூட். ஊழியருக்கு நஷ்டஈடு

(அம்பாறை)

வடக்கு கிழக்கில் இடம் பெற்ற இராணுவநடவடிக்கைகளின்போது சேதமான, உடமைகளை இழந்த கூட்டுறவு ஊழியர்களுக்கும் நட்டஈடு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் அம்பாறைக் கச்சேரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிந்தனைச் சுடர்

நீ வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால், உன்னுடைய கால்களால் நடந்துபோ மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே, அது உனக்கு ஆபத்து.

– நியேட்சே

## ஐக்கிய எண்ணம்

### இணைந்து செயலாற்ற வேண்டும்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசுபதவி ஏற்றபின் கூட்டுறவு நிறுவனங்களின் சார்பில் யாழ். மாவட்ட கூட்டுறவு சபை பல கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும்சம்மந்தப்பட்ட அமைச்சர்கள் அரசஅதிபர் ஆகியோரிடம் சமாப்பித்திருந்தது.

உணவுப்பொருள் பங்கீடு, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் திறத்தல், உணவுத் திணைக்களத்தை மீண்டும் நிறுவுதல், கப்பல் கட்டணம், வன்செயல்களால் பாதிப்படைந்த கூட்டுறவு ஊழியர்களுக்கான நஷ்டஈடு, சங்கங்களின் இழப்பீடுகள் போன்ற விடயங்கள் முக்கியமாக வலியுறுத்தப்பட்டு வந்தன,

இவற்றில் கப்பல்கட்டண விவகாரம், சங்கங்களின் இழப்பீடுகள் போன்றவற்றிக்கு அரசிடம் இருந்து சாதகமான நடவடிக்கைகளுக்குரிய பதில்கள் இதுவரை கிடைக்கவில்லையாயினும் உணவு விநியோகத்தில் மீண்டும் உணவுத் திணைக்களம் செயற்பட ஆரம்பித்தமையும், உணவுப்பொருள் பங்கீடு பிரதேச செயலகங்கள்மூலம் செய்ய முற்பட்டமையும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலயத்தை யாழ்ப்பாணத்தில் பொருத்தமான இடத்தில் ஆரம்பிப்பதற்குரிய முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமையும் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினது அயராத முயற்சியின் உந்துதலே என்பதுவெளிப்படை. இதற்கு கூட்டுறவாளர் நன்றி செலுத்த கடமைப்பட்டவர்களாவர்.

"வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர்களுக்கும் நஷ்ட ஈடு வழங்குவதற்குநடவடிக்கை எடுக்கப்படும்" என்றபுனர் வாழ்வுபுனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் அறிவிப்பு பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மன ஆறுதலை அளிக்கக்கூடியதாக உள்ளது.

இதே வேளை இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரச உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு சங்கங்களுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

அரிசி, மா, சீனி, போன்ற அத்தியாவசியமான உணவுப்பொருட்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் சங்கங்கள்கொள்வனவு செய்வதற்கு வேண்டிய கடன் வசதிகளை இன்றய சூழ்நிலையில் ஏற்படுத்திக் கொடுப்பதற்குஅரச, வங்கி உயர் அதிகாரிகள் ஆவன செய்ய முன்வரவேண்டும்.

இக் கடன் வசதிகள் சங்கங்களுக்கு வழங்கப்படுவது புதிதான நடைமுறை செயற்பாடல்ல. கடனை வழங்கும் குறிப்பாக-மக்கள் வங்கியுடன் நம்பகத் தன்மையான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது சங்கங்களின் தலையாய கடமையாகும் என்பதைஇங்கு குறிப்பிடவிரும்புகிறோம்.

"மக்கள் சேவை" யையே முக்கியமாக கொண்டியங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் இன்றைய நிலைமைகளை உணர்ந்து கூட்டுறவாளர்களும் அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

கூட்டுறவே நாட்டுயர்வு

## கூட்டுறவில் மனிதநேயம் மிக்கவர்!

தெல்லிப்பழை பல நோ. கூ. சங்க பணிப்பாளர்சபை உறுப்பினர் கூட்டுறவாளர் அமரர் செ. உலகநாதனின் நினைவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.



கூட்டுறவுப் பண்புகளின் அடிப்படையில், கூட்டுறவுக் கொள்கைகளுக்கேற்ப வாழ்ந்து காட்டிய மனித நேயமிக்க கூட்டுறவாளன் அமரர்செல்லத்துரை உலகநாதன்.

கிராம சேவையாளரான அமரர் உலகநாதனை, அவரது சேவை மனப்பான்மையும், கூட்டுறவுத் துறை ஈடுபாடும் வசாவிளான் மக்களால் தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கத்தின்பொதுச்சபை பிரதிநிதியாக அனுப்பிவைக்க வழி வகுத்தது இதனால் 1975-ம் ஆண்டு முதல் 1978-ம் ஆண்டு வரை இயக்குநர் சபை உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்.

கிராமசேவையாளராக சமாதான நீதவானாக, கூட்டுறவாளராக, வாழ்ந்தஇவர், "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்பதை உணர்ந்துதனதுபணியை மேற்கொண்டு வந்தார்.

1992-ல் சங்கத்தின் இயக்குநர் சபையின் நியமன உறுப்பினராக மீண்டும் நியமனம் பெற்று அமரத்துவம் அடையும்வரை (9 - 01 - 1995) இயக்குநராக இருந்து சேவையாற்றினார்.

மக்கள் சேவையைப் பொறுத்தவரையில் படித்தவர், பாமரர் என்ற பேதம் பாராட்டாது அவர்களது தேவைகளை உணர்ந்து இயன்றளவு பூர்த்திசெய்ய அயராது உழைத்தார் கூட்டுறவுப் பணியாளர்களைப் பொறுத்தவரை பணியாளர்களின் கஷ்ட, நஷ்டங்களை உணர்ந்து செயல்பட்டு அவர்களது குறைகளை போக்க பாடுபட்டார்.

"எல்லோரும் வாழவேண்டும்" என்ற சமதர்மக் கொள்கையினை தனது கூட்டுறவுப் பணி மூலம் மக்களை உணரச் செய்து அவர்களைக் கூட்டுறவின்பால்ஈர்த்த பெருமைக்கும் உரியவர்.

கூட்டுறவாளர் உள்ளவரை அவர் நாமம் அவரது சேவையைத்துலங்க வைக்கும் என்பது திண்ணம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
தெல்லிப்பழை ப நோ. கூ. ச.

## கூட்டுறவு இயக்கமும்; ஊழியர் பங்களிப்பும்

கூட்டுறவு "ஊழியர்" என்னும் பதத்திற்கு கூட்டுறவுப் "பணியாளர்" என்ற தத்துவக் கருத்தும் உண்டு. இத்தகைய கருத்துச்செறிந்த சொற்றொடர் வருவதற்குப் பல காரணங்கள உண்டு இவர்கள் கடமையே கண்ணாகக்கொண்டு சேவை மனப்பான்மையுடன் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஈடுபட்டுள்ளார்கள்.

கூட்டுறவுக் கொள்கைகளை நன்முறையில் எடுத்துச்செல்ல உதவுபவர்கள் பணியாளர்கள். இவர்கள் கூட்டுறவிற்கு முதுகெலும்பாக இருக்கின்றனர். மக்களால் மக்களுக்காகநடாத்தப்படுகின்ற இயக்கமே கூட்டுறவு இயக்கம. பொதுமக்களுக்கு சேவைசெய்ய விரும்பும் எந்த இயக்கமும் அவர்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும். பணியாளரின் செயல்பாடு கடமையிலிருந்து ஊற்றெடுக்கும் சேவைமனப் பான்மையில் தங்கியுள்ளது. பணியாளர்சுயநோக்கமின்றிப் பொதுநோக்குடன் கடமையைச் செய்யவேண்டும். எனவே இவர்கள் நிர்வாக இயந்திரத்தை இயக்கும் நிபுணர்களாக கடமையில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

எந்தவொரு முயற்சிக்கும் பொறுப்புணர்வு அடிப்படையானது இதனை உணர்ந்து பணியாளர்கள் மக்களிடையே நேர்மையும் தூய்மையும் கொண்டுசேவையாற்றவேண்டும். நேர்மையும் தூய்மையும் இன்றேல் ஊழல், மோசடி என்பன இடம்பெற வழிவகுக்கும். இதனைத் தடுப்பது கடினம். இது 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற தாரக மந்திரத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும். இதனை உணர்ந்து பணியாளர்கள் கடமையாற்ற வேண்டும்.

-பதுமநிதி மயில்வாகனம்-

பணியாளர் ஒவ்வொருவரும் சங்கத்தின் உடமைகளின் பாதுகாப்பிற்கு அவசியமான அனைத்தையும் செய்யவேண்டும். மக்களின் நிலையை உணர்ந்து அனுதாபம் கொண்டு கடமை புரியவேண்டும். தனக்கொரு நீதி, பொது மக்களுக்கொரு நீதி என்ற முறையில் தொழிற்படக் கூடாது.

பணியாளர்கள் உறுப்பினர்களின் தேவைகள் எவையென அறிந்து அவற்றினை நிறைவேற்றவும், மேலதிகாரிகளால் தனக்கு வழங்கப்படும் பணிப்புரைகளை அனுசரித்து பணிவுடனும் திறமையுடனும் கடமையாற்ற வேண்டும்.

கூட்டுறவுக் கல்வியை செழுமையாக்கும் பொறுப்பு பணியாளரை சார்ந்ததே. கூட்டுறவால் பெறப்படும் சீரிய வாழ்க்கை முறையையும் அதற்கு வழிகாட்டியாய் இருக்கும் அறிஞர்களின் கொள்கைகளையும், அரசாங்க நடைமுறைகளையும், மக்களுக்கு விளக்கி அவர்களைஅதன்பால் ஒழுகச்செய்தல் வேண்டும்.

இக்கல்வி ஏட்டுச் சுரக்காய் அல்ல. செயல்மூலம் செய்து கற்றலாகும். கற்கும்போது கல்லாதவனும் செயல்மூலம் அறிந்து "கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதை உணரக்கூடிய முறையில் பணியாளர்கள் கடமையாற்றின் அவர்கள் தம் உரிமைகளை பெறுவதோடு கூட்டுறவின் செழுமையான, முழுமையான வளர்ச்சிக்கும் வித்திட்டவர்கள் ஆவார்கள்.

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு பரிஷ் பல. நோ. கூ. சங்கபணியாளர் சிக்கன சேமிப்பு கடனுதவி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. து. முருகேசு, உபதலைவர், திரு. கா. திருநாவுக்கரசு, செயலாளர், திரு வ. பாலசிங்கம, பொருளாளர், திரு. மா. சிவனேசன், உப பொருளாளர், திருமதி ஜெ. சு. நல்லையா ஆகியோருடன் நான்கு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்டனர்.

## பிரதேச செயலர்களுடன் இணைவு

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரராக கடமையாற்றிய திரு. கே. பஞ்சலிங்கம சாவகச்சேரி பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். எனினும், வடமராட்சி, நல்லூர், யாழ். பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களுடன் இணைந்து செயலாற்றுவார்.

இதேவேளை வவுனியாவில் கூட்டுறவு அ. உ. ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஜெயபாலன் வலிகாமம் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்களுடனும், தீவுப்பகுதி பிரதேச செயலகங்களுடன் இணைந்து கடமையாற்ற உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கூட்டுறவாளர்களே !

உங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகள், அபிவிருத்தி வேலைகள், சங்கத்தின் சுருக்க வரலாறு, கூட்டுறவாளர்கள் பற்றிய தகவல்களை பிரசுரத்திற்காக ஐக்கிய தீபத்திற்கு எழுதி அனுப்புங்கள்.

— ஆசிரியர் —

## திட்டம் தயாராகிறது

தேசிய கூட்டுறவு மன்றம், கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம், பாவனையாளர் சங்கங்களின் அனுசரணையுடன் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் இலகுவில் பாவனையாளாகளைச் சென்றடையச்செய்யும்வகையில் திட்டம் தயாரிக்கப்படுவதாக கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் திரு சந்திரசிறிகஜதீர அறிவித்துள்ளார்.

## இடமாற்றம்

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாகக் கடமையாற்றிய திரு மு. க. முருகையா, திருகோணமலை வடகிழக்கு மாகாண சபைத் தலைமையகத்திற்கும். திரு. எம். கனகசபை வவுனியா, மன்னார் பிரதேசங்களின்கூட்டுறவு அ. உ. ஆணையாளராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

## இயக்குநர் தெரிவு

யாழ் மா. சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் திரு. ச. முருகநேசன் தலைமையில் நடைபெற்றபோது புதிய பணிப்பாளர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் திரு. ச. முருகநேசன், உபதலைவர் திரு. ஆ. இராஜநாயகம், பணிப்பாளர்களாக திருவாளர்கள், கா. திருநாவுககரசு, ச. காந்தரூபன், க. திருச்செல்வம், செ. இலங்கைநாதன், ப. உதயகுமார், ஏ. ஜே. ஜீவரட்ணம், ந. வீ. நல்லநாதன், வை. வெங்கடாசல ஐயர், த. கணேசமூர்த்தி, பொ. சத்தியமூர்த்தி, பெ. பூபாலசிங்கம், த. தர்மகுலசிங்கம்.

★

சுன்னாகம் பனை தெ. வ. அ. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நெறியாளர்களாக தலைவர் திரு. தே மதுரநாயகம் உப தலைவர் திரு. க வ. சின்னையா, செயலாளர், திரு. சி. பாலையா ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் சு. விவேகானந்தராசா, மு. கேதீஸ்வரன், சு. பொன்னுத்துரை, ம. தவத்துரை, செ. தவராசா, செல்வி சு. பொன்னுத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

வடமராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்க வருடாந்தப் பொர்துக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது திரு. வீ. எஸ். பொன்னம்பலம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக திரு. வ. கார்த்திகேசுவும் நெறியாளர் குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் த தங்கவேலு, த. நாகேஸ்வரன், கா. க. யோகநாதன், மு. அழகராசா, யா. சிமியாம்பிள்ளை ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### சிறந்த பணியாளர்தெரிவு

ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கம் 1995-ம் ஆண்டிற்கான சிறந்த பணியாளர்களைத் தெரிவுசெய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பணியாளர்கள் மட்டத்தில் சிறந்த கிளை முகாமையாளர்கள், சிறந்த தலைமைக்காரியாலயப் பணியாளர்கள், கறந்த வெளிக்கள உத்தியோசித்தர் தெரிவுகள் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்க கூட்டங்களை வெற்றிகரமாக நடத்துவது எப்படி ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தலைவர் ஒரு கூட்டத்தைக் கூட்டும்போது கூட்டத்தின் நோக்கம், சிறப்பு நோக்கம், பற்றி தெளிவாக அறிதல் வேண்டும். நிறைவேற்றத் தக்கவகையில் கூட்டத்தை ஏற்பாடு செய்வதும், குறித்த நோக்கத்தை அடைவதும் தலைவரின் பொறுப்பாகும். கூட்டத்தில் சமூகமளிப்பவர்கள், குறித்த கூட்டத்திற்கு சமூகமளிக்கத்தகுதி உள்ளவரா ? என அறிதல் வேண்டும்.

கூட்டத்தில் பேசாதவர்களின் கருத்துக்களைக் கேட்க தலைவர்முயறசிக்க் வேண்டும். கூட்டத்தின்போது தேவையற்ற சொற் பிரயோகங்களைத் தவிர்ப்பதுடன் மனம் புண்படும்படியாகவோ, ஒருவரைத் தாக்கும் வகையிலோ பேசுதல் கூடாது. பேசும்போது அளவுக்குமீறிய நாடகத்தன்மை, இயல்பாகவுள்ள அங்ககுணங்களை, செயல்களை பேச்சின்போது அடிக்கடி பிரயோகிக்கக் கூடாது.

கூட்டம் நடக்கும்போது வெளியில் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கூட்டங்கள் நீண்டநேரம் நடைபெற்றால் சிற்றூண்டிகள், அல்லது உணவு ஏற்பாடுகள் செய் வேண்டும். உணர்வூட்டக்கூடிய பான வகைகள், சோம்பல் தரக்கூடிய உணவுகள் பரிமாறக் கூடாது. தகராறுக்குரிய கூட்டங்களாயின் பாதுகாப்பை முன்னேற்பாடாக செய்தல் வேண்டும் கூட்டங்களை பொதுவான வசதிகள் கொண்ட இடத்தில் நடாத்துவதுடன் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஒழுங்காகக் கூட்டுதல் வேண்டும்.

தீர்மானம் எடுக்கும்போது நிறைவெண் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

கூட்டத்தில் கலந்து கொள்வோர் சமூகபழக்க வழக்கங்களை பின்பற்றுதல் வேண்டும் ஒரு குழுவினர் கூட்டத்தைக் குழப்பும் அல்லது கட்டுப்படுத்தும் நோக்கில் வந்திருந்தால் அதையிட்டு கவனம் செலுத்துதல் வேண்டும்;

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் சலிப்புத்தட்டாத வகையில் அமைதல் வேண்டும். நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும்போது உள்நோக்கம் எதுவுமின்றி தயாரிக்கப்பட வேண்டும்.

முக்கியமான விடயங்கள் குறித்து கூடிய நேரத்தைச் செலுத்துவதுடன், கூட்டத்தில் ஆராயப்படும் சாதாரண விடயங்கள் தொடர்பாக அதிக பிரசங்கித்தனத்தைக் குறைத்தல் வேண்டும்,

கூட்டக் குறிப்புகள் தெளிவாக எழுதப்படல் வேண்டும். கூட்டக்குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மட்டுமே இடம்பெறுதல் வேண்டும். உரையாடல்கள் இடம்பெறக் கூடாது. சில சந்தர்ப்பங்களில் உரையாடல்களைப் பதிவு செய்யும்படி ஒருசிலர் கேட்டுக் கொண்டால் பொதுவிருப்பின் படியும் தலைவரின் முன் அனுமதியுடனும் மேற்கொள்ளப்படவேண்டும்.

விவாதம் நடைபெறும்போது குறுக்கீடுகள் இடம் பெறாது ஒரு ஒழுங்குமுறையாக இடம்பெறுதலை உறுதிப் படுத்தவேண்டும்;

ஒருகுறித்த விடயம் சம்மந்தமாக ஒருவர் இரண்டுமுறைக்கு மேல் பேசுவதை தலைவர் அனுமதிக்கக் கூடாது.

உபவிதியில் குறிப்பிட்டாலன்றி கூட்டத்தை வழிநடத்திச் செல்வதற்கென சமூகம் அளிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக கூட்டத் தலைவர் அவதானமாக இருக்க வேண்டும்.

சமூகம் அளிக்கும் உத்தியோகத்தர் சபையில் உள்ளோரின் இயல்பான மனோ நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். சில கூட்டங்கள் உத்தியோகத்தரின் வழிநடத்தலின் பேரிலேயே நடைபெற்று முடிகின்றன. இந்நிலை ஏற்படாது இருக்க வழி செய்வது தலைவரின் தலையாய கடமையாகும்.

எச் சந்தர்ப்பத்திலும் தலைவராக இருப்பவர் தனது கடமைகளை விட்டுக்கொடுத்தல் ஆகாது. கூட்டத்தில் இருக்கும் உபகுழுக்கள் அல்லது குறித்த நோக்கக் குழுக்கள் சம்மந்தமாக தலைவர் அவதானமாக இருத்தல் வேண்டும்.

கூட்டத்தில் சுமூகமும் நட்பு ரீதியான தன்மையும் காணப்படுகின்றதா ? என்பதை அவதானிக்க வேண்டும். ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது தலைவர் பக்கச் சார்பாக செயற்படக்கூடாது. ஒரு விவாதத்தில் சார்பான புள்ளி விபரங்கள் இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். பிரயோசனமான கேள்விகளைமட்டுமே ஊக்குவித்தல் வேண்டும். பிரயோசனமற்றவற்றை தவிர்த்தல் வேண்டும. விளங்காத விடயங்கள் தொடர்பில அவ்விபரங்களை திருப்பிச் சொல்ல செய்தல் வேண்டும்.

### கூட்டங்களில் — தொடர் பாடலின் முக்கியத்துவம்

★ தொடர்பாடல் முறைகளில் கூட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

★ கூட்டங்கள், கொள்கைகளையும், கருத்துக்களையும் விளக்க உதவுகிறது.

★ மக்கள் அல்லது ஊழியர்களின் தேவைகளையும், விருப்புக்களையும், அறிய உதவுகிறது. அத்துடன் இருவழித் தொடர்பாடலின் மூலம் அவர்களின் கருத்துக்களை அறிய முடிகின்றது. அவர்களுககு செய்தி கிடைத்ததை உறுதிப்படுதத முடிகிறது.

★ நேரத்தை மிகுதிப்படுத்தி காகிதாதிகளின் வேலையைக் குறைக்கிறது.

★ தெளிவான ஒருமுடிவுக்கு வர முடிகின்றது.

கூட்டங்கள் இருவகைப் படும் :

I. மேன்நிலை முறை சார் கூட்டம். ( தலைவர், செயலாளர், நிகழ்ச்சி நிரல், கூட்டக்குறிப்பு, நாளாந்த நடைமுறைகள் வழமைகள் என்பவற்றுக்கு அமைய நடை பெறுவது )

II. முறைசாராக் கூட்டங்கள் இது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பாக, தொழிலாளர்கள் தங்களுக்கிடையே சேர்ந்து சில விடயங்களை விவாதிப்பர், சட்ட திட்டங்கள் பெரும்பாலும் இதில் கடைப்பிடிக்க வேண்டியதில்லை ஒருவேளையில் ஒரு பிரச்னை ஏற்பட்டால் 4 - 5 பேர் சேர்ந்து முடிவு எடுக்கலாம்.

ஒரு கூட்டத்தினால், தகவல்கள் வழங்கப்படுகின்றன, தகவல்கள் பெறப்படுகின்றன, பிரச்னை தீர்க்கப்படுகின்றது, ஒரு பொதுவான கருத்தொன்று ஈட்டப்படுகின்றது.

பின்வருவனவற்றுக்காக கூட்டம் கூட்டப்படுகின்றது,

★ நிறுவனத்தின் கொள்கைகளை விளக்கவும், கேட்கவும் நிறுவன பொறுப்புக்களையும் மரபுகளையும், விளக்கவும், அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொள்ளவும், வழங்கவும், புதிய நடைமுறைகளையும், ஒழுங்குகளையும் விளக்கவும் கூட்டப்படுகின்றது. (முற்றும்)

நன்றி 'சமூகவியல் சிந்தனை'

# முகாமைத்துவம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### தலைமைத்துவ அதிகாரம்:

தலைவர் மற்றவர்களை வழிநடத்தும் இயல்புள்ளவராகவும, கட்டுப்பாடும் ஒழுக்கமும் உள்ளவராகவும் வழமையான நடைமுறைப் பிரமாணங்களை அநுசரித்து நடப்பவராகவும், பிரமாணங்கள் முரண்படும் இடத்தில் அதற்குத் தெளிவான தீர்வை எடுக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். (தீர்மானங்கள் எடுப்பதில் தனித்த தீர்மானம் எடுப்பதிலும் பார்க்க கூட்டுத் தீர்மானங்கள் எடுப்பது சிறந்தது.)

குழுக்கள், அல்லது பணியாளர்கள் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல் வேண்டும்

குழுக்களும், பணியாளர்களும் தலைவர்மீது விசுவாசமுள்ளோராக இருத்தல் வேண்டும. இத்தொடர்பு பின்வருமாறு இருப்பது வரவேற்கத் தக்கது.

வேண்டுமானால் ஒரு வகுப்பறையின் ஆசிரியர்போல கடமையாற்ற வேண்டும்; தனது மேற்பார்வையை செய்வதில் இறுக்கமானவராகவும், அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் நீதியான விட்டுக்கொடுக்கும் தன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும். பல்வேறு அபிப்பிராயங்களை தானாக வழங்கக்கூடியவராகவும், இவ் அபிப்பிராயங்களை மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவராகவும இருத்தல் வேண்டும். எண்ணங்களை பரிமாறக் கூடியவராக இருத்தல் வேண்டும். வேண்டுமானால், மெதுவாகவும், விரைவாகவும் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் நடைமுறையின் பிரகாரம் தலைவர் ஒருவர் தொழிற்படுதல் வேண்டும்.

நோக்கத்தை அடைவதற்காக, தனக்குக்கீழ் உள்ளவர்களை ஊக்கமளித்தல்; ஒரு விடயத்தை ஆரம்பித்தல் அல்லது எண்ணத்தைஉருவாக்கல்; எடுத்த காரியத்தை நிறைவேற்றும் பொறுப்பு; ஒரு நண்பனாகவும், தத்துவஞானியாகவும், விடயத்தை தெளிவுபடுத்துவோனாக குழுவாக வேலைசெய்வதை ஊக்குவிப்போனாக இருத்தல்வேண்டும்

### தலைமை தங்குதலின் முறைகள் :

சர்வாதிகாரத் தலைமை, சனநாயக தலைமைத்துவம்.

தனது தீர்மானங்களை மற்றவர்கள் ஏற்கும்தன்மை அதாவது, தனது தீர்மானங்களை மறறவர்கள் ஏற்கும் நிலையில் இருந்தால் அதை நிறைவேற்றுவது இலகு.

தனது எண்ணங்களை முன்வைதது பிரச்னைகளுக்கு விடையளித்தல்; தீர்மானங்களை முன்வைத்து தேவைக்கேற்ப மாற்றுமியல்பு; பிரச்னைகளைமுன்வைத்து ஆலோசனைகளைப் பெறறு தீர்மானம் எடுத்தல்; குழு நியமித்து தீர்மானங்கள்எடுத்தல்

### தலைவருக்கு இருக்கவேண்டிய குணத்சயங்கள் :

விவேகம்; பரந்தவிருப்பும் கல்வி அறிவும்; தொழில்நுட்ப அறிவு; பிரச்னைகளைப் பிரித்து அறிந்து தீர்வுகூறும் இயல்பு; விரைவாக தீர்வு கூறும் இயல்பு; புதிய சிந்தனைகளை உருவாக்கல்; முதுமைப்பருவம் ( அனுபவம் ); ஆளுமை; நுட்ப அறிவு; பொறுப்புக்களை சுமக்கும் இயல்பு; மக்களை, மனிதநடத்தையை புரிந்து கொள்ளும் இயல்பு, சமூக நடத்தையை புரிந்துகொள்ளும் இயல்பு; தேவைக்கேற்ப மாற்றங்களை உட்புகுத்தும் இயல்பு; ஒரு விடயத்தை மற்றவருக்கு எடுத்துக் கூறும் இயல்பு; வழிகாட்டும் இயல்பு; மேலாதிக்கத் தன்மை, கீழ்படிவு; உடல், உளரீதியான உறுதிப்பாடும்.

நன்றி. (முற்றும்)

சமூகவியல் சிந்தனை

# கூட்டுறவுப் பயிற்சி வினா - விடைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

8. பொறுக்கி எடுக்கும் நிகழ்தகவுமுறை என்றால் என்ன ?

பொறுக்கியெடுத்தல் நிகழ்தகவு முறையானது ஒரு வாக்காளர் அட்டவணையை (உ-ம்) 23 – 37 வரை இடைவெளியில் 14 வித்தியாசம் என்ற அடிப்படையில் இடைவெளிகொண்டதாக தொடர்ந்தும் வாக்காளர் அட்டவணையை அல்லது வேறு தகவல்களைத் தயாரித்து முடிவுகளைப் பெறுதல்.

9. நேர்முக உரையாடல் என்றால் என்ன ?

ஒருவரின் ஒரு குறிப்பிட்ட விடயம்சம்மந்தமாக அவரின் கருத்துக்களை அல்லது விளக்கங்களை அறிந்துகொள்ள பயன்படும், ஒரு சமூகவியல் ஆய்வுமுறையாகும். இதில் நேர சிக்கனம, எதிர்பார்க்கப்படும் விடயங்கள் குறுகிய காலத்தில் பெறப்படுகின்றது. நோக்கத்தை இலகுவாக அடையமுடிகின்றது.

10. தபால்மூலம் பெறப்படும் தகவல்களில் இருந்து கிடைக்கும் நன்மை, தீமைகளைத் தருக.

நன்மை : செலவு குறைவு, இலகுவானது, நேரச் செலவில்லை.

தீமைகள் : கேள்விகளை விளங்கிக்கொள்ளமுடியாத் தன்மை (ஒருசிலருக்குஏற்படலாம்) கேள்விகளுக்கு பதில் எழுத பொறுமையில்லாத் தன்மை; விலகல்களை அல்லது முரண்பாடுகளை தவிர்க்கமுடியாது.

11. நேரடி உரையாடலின்போது தெரிவுசெய்யப் படும் வினாக்கள் தொகுக்கப்படுவதன் நோக்கம் என்ன ?

குறிப்பிட்ட நேரத்தில் தேவையான நோக்கங்களை நிறைவுசெய்வதற்காக; நோக்கத்தை உள்ளடக்கி நிச்சயப்படுத்துவதற்காக; நிறுவனத்திற்கும், நேர்முகப் பரீட்சையில் ஈடுபடுபவருக்கும் நேரச்சிக்கனம் இருக்கும்; விலகல் இருக்காது.

12. ஆரம்ப பரீட்சித்தல் என்றால் என்ன ?

இது ஒரு சமூக ஆய்வுமுறையாகும். ஒரு திட்டத்தை அல்லது நோக்கத்தை செயற்படுத்தமுன்னர் ஒரு இடத்திலோ அல்லது குழுவிலோ தொழிலை ஆரம்பத்தில் பரீட்சித்துப் பார்த்தல்.

13. சமூகமாற்றம் என்றால் என்ன ?

பல்வேறு புறக்காரணிகளினால் சமூகத்தில் ஏற்படும் மாற்றம் சமூக மாற்றம்எனப்படும். கல்வி, கலாச்சாரம், சமூக மரபு அரசியல் பொருளாதாரங்களில் ஏற்படும் நடத்தை மாற்றங்கள். இது ஒவ்வொரு நாட்டிலும், பகுதியிலும் வீட்டிலும் நடைபெறுகின்றது.

14. பங்குகொள்ளல் அவதானிப்பு என்றால் என்ன ?

சம்பந்தப்பட்டவர்களோடு சேர்ந்து அவதானித்தல். சேர்ந்துபோய் பிரச்சனைகளை அறிதல் உ-ம் தொழிற் சங்கமொன்றின் ஊடாக கலந்துரையாடலின் மூலம் பங்கேற்பதன்மூலம்.

15. குடும்பம் என்றால் என்ன ?

குடும்பம் என்பது ஆணுக்கும், பெண்ணுக்குமிடையிலான கருத்தொருமித்த தொடர்பினையும் அவர்களுக்குப் பிறக்கும பிள்ளைகளையும் உள்ளடக்கிய தாகும்.

16. திருமணம் என்றால் என்ன ?

திருமணம் என்பது ஒரு சமூகத்தில் மனிதனுக்கிடையிலான பந்தத்தை ஏற்படுத்துகின்றது இது இரத்தத் தொடர்புடையது. ஆணுக்கும, பெண்ணுககும் ஏற்படுகின்ற ஓர் உறவுமுறை, சட்ட பூர்வமானதுமாகும்.

17. குடும்பம் ஏன் அவசியம் ?

எவரும் இவ்வுலகில் தனித்து வாழ முடியாது. வயது போய்விட்டால் துணைக்கு ஆளில்லாமல் போய்விடும். இதனால் குடும்பம் அவசியம், பாரம்பரியங்கள்; மரபுகளை வளர்த்துக் கொள்ளவும் இது அவசியமாகின்றது.

18. ஆதாரக் குடும்பம் என்றால் என்ன ?

தாய், தந்தை, பிள்ளைகளைக்கொண்ட அமைப்பே ஆதாரக் குடும்பம் எனப்படும். இக்குடும்பம் சமூகத்தின் சிறிய குழுவாகும்.

19. விரிவு படுத்தப்பட்ட குடும்பம் என்றால் என்ன ?

பல ஆதாரக் குடும்பங்களிடையே நிகழும் மகன், மருமகன், மாமி, மைத்துனி என்ற உறவு முறைகள் விருத்தி ஏற்பட்டு விரிவுபடுத்தப்பட்ட குடும்பம் எனப் படும்

20. முறைசார்கல்வி, முறைசாராக்கல்வி என்றால் என்ன ?

முறைசார்கல்வி : மனிதர்கள் பிறந்தது முதலே கல்வி கற்க ஆரம்பிக்கின்றனர். மனிதரது முதற்கல்வி வீட்டில் ஆரம்பிக்கின்றது பின்னர், தான்வாழும் சூழலில் ஆரம்பிக்கின்றது. சமயம், மொழிசார்ந்துள்ள குழு, சமவயதுடையோரின் இயல்புகள் எல்லாம் முறை சாராக்கல்வி வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைகின்றன.

முறைசார்ந்த கல்விக்குரியவையான பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் உலகில் மானிடருடைய அபிவிருத்திக்கு துணைபுரிகின்றன. இவை முறைசார்ந்த கல்விக்கு உதவி புரிகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் நெஞ்சங்கள் - 4

— கே. எஸ். ஆனந்தன் —





**முன்கதைச் சுருக்கம்**

[ ஏழைக் குடும்பத்தில் பிறந்து உயர்பதவியிலிருக்கும் வாலிபனான ரவிசங்கர் தன்னை பேட்டிகாண விரும்பிய பெண்ணியக்க பிரதிநிதியான சுதாமதியை நினைத்து கலக்க முற்றிருந்தவேளையில் எதிர்பாராத பிரச்சனையோடுவரும் சுதாமதி அவன் நிலைகண்டு தடுமாறுகின்றாள். தன் தங்கை மதுராவினால் அவனுக்கு ஏற்பட்ட உண்மை நிலையை அறிய முற்படுகின்றாள். ரவிசங்கர் மதுராவுக்கிடையே ஏற்பட்ட தொடர்புகள் நினைவலைகளாகின்றன. ]

காலைஇளம் வெய்யிலில் ரவி சங்கருடைய சிவந்த மேனியில் வியர்வை முத்துக்கள் அரும்பி நின்றன. மார்பில் கறுத்த ரோமங்கள் நிறைந்து காணப்பட்டன. மடித்துக் கட்டிய சாரத்துடன் தோட்டத்துக்கு நீர் பாய்சிக்கொண்டிருந்தான்.

கத்தரி, தக்காளி, மிளகாய் கன்றுகள் ஒருபுறமும், கரட், போஞ்சி, பீற்றூட், வெங்காயம் மறுபுறமும், கிணற்றையண்டிய பகுதிகளில் வாழையும், மரவள்ளியும் பார்ப்பதற்கு அழகும் பொலிவுமாய் காட்சியளித்தன. வாழைக்கு பாத்திபோட்டுக் கொண்டிருந்த மாணிக்கத்தைஅழைத்து மண்வெட்டியைக் கொடுத்துவிட்டு திரும்பியவன் தன்னை ஆச்சரியப் பார்வையுடன் பார்த்து நின்ற மதுராவைக் கண்டதும் " குட் மோணிங் மிஸ் மதுரா " என்றான்.

" குட் மோணிங் சார் நான் இதைஎதிர்பார்க்கவேயில்லை' என்றாள். நல்ல தோட்ட நிலத்தை வைத்துக்கொண்டு வீண்பொழுது போக்குவதைவிட இப்படிச் செய்தால் எங்களுக்கும் மரக்கறி கிடைக்கிது, பணமும் மிச்சமாகுது " என்று கூறியவாறே கொடியில் காயப் போட்டிருந்த துவாயைஎடுத்து உடம்பைத் துடைத்துக் கொண்டான்.

" நல்ல உத்தியோகம், கை நிறைய சம்பளம், உங்களுக்கு ஏன் சார் இந்தவேலைகள் " " நீங்கள் வானொலி கேட்டிருப்பீர்களே. உடற்பயிற்சிக்கு, உளவளர்ச்சிக்கும், வீட்டுக்குத்தேவையான காய்கறி வகைக்கும் ஒரே வேளையில் நமக்கு இம்முயற்சியைகொடுக்கின்றது நான்ஒருவிவசாயியின் மகன். என்னதன் உத்தயோகம் பார்த்தாலும் இதில் ஓர் மனநிறைவுண்டு மிஸ் மதுரா. நங்கள போட்டிருக்கின்ற பூந்தோட்டம் போலத்தான் இதுவும " என்றான்.

" என்னவோ சார் நீங்கள் எதற்கும ஓர் பதில் தயாராக வைத்திருப்பீர்கள். நீங்களெல்லாம் இப்படிச் செய்தால் உண்மையான விவசாயிகளின் விளைபொருட்களை வாங்குவது யாராம் " என்றாள் சிரித்து கொண்டே.

" நியயமான கேள்விதான். ஆனாலும் உங்களைப் போன்றவர்களிருக்கும்போது அது பற்றிநாம கவலைப்பட வேண்டியதில்லையல்லவா ? " என்றான்.

" அதுவும் சரிதான் "

" நீங்கள் ஏது அபூர்வமாய் இங்கே விசயம் செய்திருக்கின்றீர்கள். அதுவும் மேலே போர் விமானங்கள வட்டமிடும வேளையில் ... .. ... " என்று கேள்வியை வேறுதிசைக்குத் திருப்பினான்.

சுந்தரேசன் கூறிய விடயங்களைக் கூறி அவர் கொடுத்த கடிதங்களை ஒப்படைத்தாள் மதுரா. இதற்கிடையில் கோமதியம்மா தேனீருடன் வந்து சேர்ந்தாள்.

" மிஸ் மதுரா உங்களுடைய வீட்டுக்கு வந்தவேளையில் அதிஸ்டம் தங்கை சுமித்திராவுக்கு திருமணம் நிட்சயமாகியிருக்கின்றது. " என்றான் ரவிசங்கர்.

" ஆமா, தங்கச்சி பல இடங்களில் மாப்பிளை பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருந்தோம். இந்த வீட்டின் ராசி, இங்கே வந்தபின்பு நாங்கள் தேடாமலே சம்பந்தம் தேடி வந்திருக்குது. பையன் கொழும்பிலை வேலை அதுதான் தம்பி போகிறான். " என்றாள் கோமதியம்மா.

" அம்மா வரவேண்டிய வேளை வந்தல் எல்லாம் தானே வந்துசேரும். நாங்கள் இந்த வீட்டை வாங்கிய பின்பு நடைபெறவிருக்கும் முதற் கல்யாணம். மிஸ் சுமித்திராவுக்கு என்னுடைய அட்வான்ஸ் திருமண வாழ்த்துக்கள் " என்றாள்.

சுமித்திரா வெட்கப்பட்டு தலை குனிந்து சிரித்துக் கொண்டே நன்றி கூறினாள். நடக்கவிருக்கும திருமண நிகழ்ச்சிகள் அவள் சிநதனைத் திரையில் நிழற்படமாய் விரிந்தது. அதேவேளையில் மதுராவையும் அண்ணன் ரவிசங்கரையும் சோடியாய் சேர்த்துப் பார்த்துக் கொண்டாள். தன் நினைவுபோல அமைந்து விட்டால் .. ... ... ! என்று கற்பனைக் கனவில் மிதந்து கொண்டிருந்தாள்.

திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டுவரும் பொழுது மதுராவின் உள்ளம் மகிழ்சிப்பெருக்கில் நிறைந்திருந்தது. பெரிய வீடு, அதுவும் மாடிவீடு. பல்வேறு வசதிகளுடனும் வாழ்ந்தாலும் மனதில் மகிழ்ச்சியே கிடைப்பதில்லை. அம்மா இல்லாத தனிப்பெண். தோழிகள் யாராவது வந்தால் சரி இல்லையேல் தனிமையில் தானிருக்க வேண்டும். ஆனால், ரவிசங்கருடைய வீட்டில் எளிமையும், அன்பும், பண்பும் ஒருங்கிணைந்த சந்தோஷமான குடும்பம் அவர்களோடு தங்கிய ஒவ்வொரு நிமிடமும் அவள் இவ்வுலக நினைவையே மறந்திருந்தாள்.

ஒருத்தி ஒருத்தனை நினைத்து விட்டால் அதன் அர்த்தம் தான் என்ன ? அரும்பிய நினைவு மொட்டாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியும்வரை அதுவே அவளுக்கு ஒரு இன்ப வேதனை தான் எதற்கும் ஏங்காதவள் மனதில் ஓர் ஏக்க வித்து விழுந்து முளைவிட ஆரம்பித்து விட்டது.

விரும்பிய எதையும் சுலபமாக பெற்றுவந்த அவளுக்கு இது ஒரு புதிய அனுபவம். அந்த அனுபவமே தனிமையில் ஓர் இன்பவேதனையாய்தானிருந்தது.

மதுரா எழுந்துசென்று கண்ணாடியின் முன்நின்று தன்னைப் பார்த்துக்கொண்டாள். தன்னுடைய அழகினைத் தானே ரசித்தாள். அவளுள் ஓர் மதுராவின் குரல் ஒலித்தது. " மதுரா அவர் எனக்கு கிடைப்பாராடி? ஏன் கிடைக்க மாட்டார் ? எனக்கு லையா ? அறிவில்லையா ? அந்தஸ்து இல்லையா ? என்ற ஓர் இறுமாப்பு அவளிடம் தோன்றிற்று. எப்படியும் அவரை அடைந்தே தீருவேன் என்று திடசங்கற்பம் செய்துகொண்டாள்.

சிறுவயதில் தாய் தந்தையின் அரவணைப்பின்றிவாழ்ந்திருந்ததால் ஏனோதானோ என்ற ஓர் நிலையற்ற மனப்பான்மையும், தான் நினைத்ததைச் சாதிக்கவேண்டும் என்ற ஒரு தலைப்பட்சமான முடிவுகளையும் வளர்த்துக்கொண்டு விட்டதால் சுந்தரேசனும் அவள் போக்கிலேயே அவளை விட்டு வைத்துவிட்டார்

இளமையில் பெற்றோரின் அரவணைப்பும், அன்பும் பிள்ளைகளுக்கு நிட்சயம் இருக்க வேண்டும். என்னதான் வசதிகளிலிருந்தும், பெற்றோரிருந்தும் பெரும்பாலான பிள்ளைகள் அநாதைகள்போல வேற்று மனிதர்களின் ஆதரவில் வளர்கின்றனர் இதனால் அவர்கள் மனநிலை பாதிப்படைந்து காணப்படுவதாக உளவியலாளர் கூறுகின்றனர். இதேநிலை பெற்றோர் வயதான காலத்தில் பிள்ளைகளின் பராமரிப்பு கிட்டாதநிலையில் அவர்கள் என்னதான் வசதியாக வாழ்ந்தாலும் மனவிரக்திக்குள்ளாகிதம்பிள்ளைகளால் புறக்கணிக்கப் பட்டவர்களாகவே கருதுவதாக உளவியலாளர் கூறுகின்றனர். குடும்பம் என்பது பந்தபாசங்களால் பிணைக்கப்பட்ட ஓர் கூட்டுக்கொடி வகையாய் இருந்தாலன்றி தனித்தனியாகப் பிரிந்து நின்றால் பெரும்பாலும் அல்லல் படநேரிடும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும் " ஒன்று பட்டால் உண்டு வாழ்வு " " அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு " என்ற பழமொழிகள் வாழ்வை அனுபவித்தவர்களின் அனுபவ வாயிலாக வந்த உண்மைகளன்றோ !

மதுரா படித்த பெண்ணாயினும் கஸ்டம் தெரியாது வளர்ந்தவள் அவள் வாழ்ந்த, வளர்ந்த, படித்த சூழ்நிலைகள் யாவும் பணக்காரவர்க்கத்தின் ஆளுமைக்குட்பட்டவையாயிருந்தன. நாகரீகச் சூழலிலும், ஆடம்பரமான சமுதாயத்தினருடனுமே உறவிருந்ததால் கஸ்டப்பட்ட மக்களைப் பற்றிநினைத்துக்கூடப்பார்த்ததில்லை அவளுடைய மனதில் ஓர் ஆண் துணையைப்பற்றி நினைத்தின்புற கிடைத்த ஓர் சந்தர்ப்பம் ரவிசங்கரைப் பார்த்தபேதுதான் ஏற்பட்டது. அவளுடைய அத்தை மகன் ஒருவன் அமெரிக்காவில் இருப்பதாகவும் அவனுக்கே அவளை மணம்முடிப்பதுஎன்று சுந்தரேசன் நினைத்திருப்பதால் அவள் தனக்கு என்று ஒரு ஆண் துணை நினைவுகளை மனதில் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. விதியாரைத்தான் விட்டது ? ரவிசங்கருடைய வரவு அவளைச் சபலத்துக்குள்ளாக்கி விட்டதால் கட்டறுத்த குதிரையாய் அவள் மனம் அலைபாய்ந்துகொண்டிருந்தது.

ஆடம்பரம் நிறைந்த தங்களுடைய பங்களாவில் ரவி சங்கருடன் தனித்து வாழ்ந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்தபோது அந்தக்கன்னி மனம் கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தது தன்னையே மறந்த நிலையில் தேனுண்ட வண்டாகி மயங்கிக்கொண்டிருந்தாள்.

நாம் வாழும் உலகினை அவள் நினைத்தாளில்லை. குண்டுக்கு அஞ்சி.குழிவெட்டிப் பதுங்கும் மனிதர்களைப் பற்றிய நினைவுகளே இல்லாத நிலை. வானத்திலிருந்து நாய்களைச் சுடுவதுபோல மனிதர்களை வேட்டையாடும் போர் விமானங்களையோ, உலங்கு வானூர்திகளையோ நினைத்துப் பயந்தாளில்லை. ஒரு வேளை சோத்துக்கும், இரவு எரிக்க மண்ணெண்ணையில்லை என்று தவித்துத் திரியும் மக்களைப் பற்றியோ, போர்க்காலச் சூழலில் அடுத்த நிமிடமோ, அன்றிமறுநாளோ என்ன நடக்கும் என்ற அச்சமேதுமின்றி இன்ப நினைவுகளில் அமிழ்ந்துகொண்டிருந்தவளை என்னடி மதுரா கதவெல்லாம் திறந்து போட்டபடி பகல் கனவா ? " என்று முதுகில் தட்டிய தோழி சுமதியின் குரல் கேட்டு திடுக்கிட்டாள் - சுயவுணர்வடைந்தாள்.

" சுமதி நீயா ? " என்றாள்.

" ஏன்டி வேறு யாரையாவது எதிர்பார்த்தாயா ? "

" நோ ... நோ ... .. நீ இந்த நேரத்தில் வந்ததில்லையே. அதுதான்டி கேட்டேன் " என்று சிரித்து சமாளித்தாள்.

" உண்மையைச் சொல்லடி மது. என் மதுராவின் உள்ளத்தைக் கலக்கிவிட்ட கள்வன் யார் ? "

" சுமதி "

" ம். சொல்லேன்டி. காற்றுப் புக முடியாத கோட்டையாய் ஆண்களையே வெறுத்து ஒதுக்கிய இந்தக் கோட்டையை தகர்த்தவன் யாரடி ? உன் அத்தான் அதாவது அமெரிக்கா அத்தானா ? "

" இல்லேடி, அது ஒரு கதை "

" என்ன கதை. உனக்குத் தான் தெரியுமே எனக்கு கதை என்றால் அல்வா சாப்பிட்ட மாதிரி. சொல்லேன்டி மது "

" சுமதி, நீ என் உயிர் தோழியாச்சே உனக்குத் தெரியாமல் என் இதயத்தில் எதையும் பூட்டிவைச்சதில்லை. நாங்கள் வாசிற்றியிலை சேர்ந்தபோது சீனியர் ஸ்ருடன்ராகவிருந்து அடுத்த வருடம் ரியூட்டராக இருந்தாரே ரவிசங்கர். "

"ஆமா அவர் இப்ப ஏ. சியாயிருக்கின்றார். "

"அவரேதான் சிலநாட்களுக்கு முன்பு இங்கே வந்திருந்தார். அவரை யதேச்சையாக இந்த யன்னல் வழியாய்பார்த்தேன் அவரும் பார்த்தார்.

" சீதையும், ராமரும் பார்த்த மிதிலைக் காட்சியாகிவிட்டதாக்கும் " என்று சிரித்தாள் சுமதி

"ஆமாடி என்னையறியாமலே அவர்மீது ஒரு ... "

"அதுதாண்டி காதல். அவரோடு கதைச்சியா ? அவர் சம்மதித்தாரா ? அப்புறமா பேசினியா ? "

"ஏண்டி அவசரப்படுகின்றாய் நான் இந்த விடயமாய் அவரோடு கதைக்கலை "

"ச்சாய் நானும் என்னமோ என்றிருந்தேன் இவ்வளவு தாவா ? "

"ம்"

"என்னடி சோர்ந்து போனாய். ? "

" இன்ரஸ்ட் இல்லாத கதை"

" அப்படி நினைக்காதே சுமதி மதுரா நினைச்சால் சாதித்தே தீருவாள் என்று உனக்குத் தெரியுமே "

" நிச்சயம் செய்தபின்பு கூறடி. பகற்கனவு காணு முன்பு உறுதிப்டுத்திக்கொள. மனம் உடைஞ்சு போவாய் "

" அவர் கொழும்புக்குப் போகிறார். திரும்பி வந்ததும் நான் உறுதிப்படுத்திக்கொள் கிறேன். அப்புறம் உனக்கு எதுவும்சொல்லமாட்டேன்டி'

" ஏன்டி மதுரா. உங்கப்பா இதற்கு சம்மதிப்பாரா ? "

" சம்மதிக்காமல் எங்கே போவார் ? " என்று கூறியவள் வெளிக்கேற்றை திறந்து கொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தவர்களைப் பார்த்ததும் சுமதியையும் இழுத்துக் கொண்டு கீழே இறங்கி ஓடினாள்.

( வளரும் )

## தற்பெருமை அழிவைத் தரும் !

ஒரு நத்தையும் ஒரு மின்மினியும் நட்பாக வாழ்ந்தன. மின்மினி எப்போதும் தற்பெருமை பேசிக்கொண்டேயிருக்கும் தன்னைப் பற்றிப் பேசுவதில் அது சலிப்படைவதில்லை.

ஒருநாள் அது நத்தையிடம் 'நண்பனே உன் நிலைக்குநான் இரங்குகிறேன். உன்னை யாரும் மதிப்பதேயில்லை. பகலில் புல்லும், இலைகளிலும் மறைந்து காலம் கழிக்கின்றாய், இரவில் உன் கூட்டிற்குள் முடங்குகிறாய் மரக்கட்டைபோல் தூங்குவதுதான் உனக்கு மகிழ்ச்சி தருகின்றது. என்னைப்பார் மாலை நேரம் வந்ததும், நான் ஒளி வீசுகின்றேன். மக்கள் நின்று என் அழகைக்கண்டு ரசிக்கிறார்கள் " என்று கூறியது.

உண்மைதான் என்வாழ்க்கை இருளும் கவலையும் நிறைந்தது. உன் வாழ்க்கையோ மகிழ்ச்சியானது என்று ஒப்புக் கொண்டது நத்தை.

இவை இப்படியாக பேசிக் கொண்டிருந்தபோது பள்ளி மாணவர்கள் அவ் வழியால் வந்தனர். டோய் மின்மினிப் பூச்சியடா எனக்கத்தி அதைத் துரத்திப்பிடித்தனர். மின்மினி தப்பிக்க முயன்ற போதும் அவர்கள் அழுத்திப்பிடித்த போது மின்மினி நசுங்கி இறந்தது.

நத்தை பத்திரமாக ஓட்டுக்குள் முடங்கிக்கொண்டது. தற்பெருமை எப்போதும் அழிவைத்தருமல்லவா.

— அண்ணா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி விரதத்தின் மகிமை !

இம்மாதம் 27-ம் திகதி திங்கட்கிழமை மகா சிவராத்திரி தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பக்தியும் முத்தியும்வேண்டுபவர்கள் தவறாமல் கடைப்பிடிக்கும் விரதம் சிவராத்திரி விரதம். சிவராத்திரி யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பட்ச சிவராத்திரி மகா சிவராத்திரி என்று சிவராத்திரி ஐந்து வகைப்படும். மாசி மாதத்தில் பௌர்ணமிக்குப் பிறகுவரும் 14-ம் நர்ளே மகாசிவராத்திரியாகும்.

சிவராத்திரி தினத்தில் உணவுஉட்கொள்ளாமல் அதாவது உபவாசம் முக்கிய இடம் பெறுகின்றது. உப என்பது அருகில் என்பது பொருள். வாசம் என்பதற்கு இருத்தல் என்று பொருள். இதனால் தான் சிவராத்திரி தினத்தில் சிவன் அருகிலிருந்து அவன் நினைவிலே ஆழ்ந்து தோய்ந்திருக்க வேண்டும்.

சிவராத்திரி தினத்தில் நான்கு ஜாமமும் சிவபூஜை செய்யவேண்டும். ஒரு ஜாமம் என்பது மூன்றுமணி நேரத்தைக்குறிக்கும். இரவு 11-30 முதல் ஒரு மணிவரையுள்ள காலம் 'லிங்கோற்பவகாலம்' இதுவே மாலும் அயனும் இறைவனின் அடிமுடியைத் தேடிச்சென்றபோது இறைவன் சோதிப்பிளம்பாக விஸ்வரூபம்கொண்ட நேரமாகும். இரவு முழுவதும் கண்விழிக்க முடியாதவர்கள் கண்டிப்பாக லிங்கோற்சவகாலம்வரையிலாவது கண்விழிக்க வேண்டும், சிவராத்திரிபற்றி பல கதைகள் உண்டு,

— பர்மினி —

பார்வதி ஒருசமயம் விளையாட்டாக சிவபெருமானின் கண்களைப் பொத்தினாள். சிவபெருமானின் கண்களாக சூரியனும், சந்திரனும் விளங்குகிறார்கள். அம்பிகை விளையாட்டிற்காக பரமசிவனின் கண்களைப்பொத்தியதும் உலகெங்கும் இருள் கவ்வியதும் உயிர்களெல்லாம் அந்த காரிருளில் செய்வதறியாது திளைத்தனர். தேவர்கள் இந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றுமாறு சிவனைப் பூஜித்தனர். தேவர்களின் பிரார்த்தணைக்கமைய சிவபெருமான் தனது நெற்றிக் கண்களைத் திறந்தார். அப்போது நெற்றிக் கண்ணிலிருந்து பெரும் நெருப்புப் பிளம்பு தோன்றி வெளிப்பட்டது.

அதைப்பார்த்து உமாதேவியார் அஞ்சினார். அம்பிகையின் அச்சத்தை போக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த நெருப்புப்பிளம்பைப் சந்திரனின் தன்னொளியாக மாற்றினார். அந்த இரவில் இருந்து அன்றையதினத்தை சிவனாய்பூஜிக்கும் வழக்கம் ஏற்பட்டு சிவராத்திரியாக இந்நாள் மாறியது

லங்க புராணத்தில் திருமாலும், பிரம்மாவும் சிவபெருமானின் அடி முடியைக் தேடிச் சென்றபோது இறைவன் ஜோதிவடிவயாகத் தோன்றினார். அதுவேசிவராத்திரியாகுமென்கின்றது. எது எப்படியிருப்பினும் சிவனைப் பூஜித்த ஒரு நாள் சிவராத்திரியென்போம்.

# மாணவர் அரங்கு

**மாணவ மணிகளே !**

இது உங்கள் பக்கம். உங்கள் அறிவையும், ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள இப்பக்கத்தினைப் பயன்படுத்துங்கள். உங்களால் முடிந்தவரை சுருக்கமாக எழுதி ஆசிரியர், " ஐக்கிய தீபம் " 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

## பிள்ளைகளை தவறாக வளர்க்காதீர்கள்

1. குழந்தையாக இருக்கும்போது அவர்கள் விரும்பிய போதெல்லாம் கேட்டதை வாங்கிக்கொடுக்காதீர்கள்.
2. அவர்கள் கெட்டவார்த்தை பேசினால் சிரியாதீர்கள்.
3. சாமி கும்பிட வற்புறுத்துங்கள்.
4. அவர்கள் கண்டபடி போட்டுச்செல்லும் உடைகளைத் தவிருங்கள்.
5. அவர்கள் முன்னிலையில் குடும்பச் சண்டை போடாதீர்கள்.
6. கேட்கும்போதெல்லாம் பணம் கொடுக்காதீர்கள்.
7. அக்கம் பக்கத்தாரிடமும், ஆசிரியரிடமும் பரிந்து பேசாதீர்கள்.
8 அவர்கள் சிக்கலில் மாட்டிக்கொள்ளும்போது நியாயத்துக்கமைவாக நடவுங்கள்.

இவைகளை ஒவ்வொரு பெற்றோரும் அனுசரிப்பார்களானால் தம்பிள்ளைகள் குட்டிச்சுவராகமல் நற்பிரஜையாக உருவாக்க முடியும்.

— சுவாமிஜி

# "காட்ராக்ட்" கண்நோய் உயிர்ச்சத்து குறைபாட்டால் ஏற்படும் ?



மனித உறுப்புக்களில் கண் பிரதான இடத்தை வகிக்கின்றது, கண்ணைக் காப்பது இமை. இக் காவல் அரணை தாண்டி பல்வேறு விதமான நோய்கள் கண்களைத் தாக்குகின்றது. இத்தகைய நோய்களில் ஒன்றுதான் 'காட்ராக்ட்' என்னும் நோயாகும்.

"காட்ராக்ட்' ' என்றால் என்ன? - கண்ணின் வில்லையில் ஓபாசிடி ( Obasity ) ஒருவித மர்ம பழுப்பு நிறம் ஏற்பட்டு பாதிக்கப்படுகிறது. இதனை அறுவைச் சிகிச்சைமூலம் நீக்கிவிடுகின்றார்கள்.

ஒருமுறை "காட்ராக்ட்" (Cataraot) அறுவைச் சிகிச்சை செய்துவிட்டால் மறுமுறை வருவதில்லை. சில சந்தர்ப்பங்களில் அறுவைச் சிகிச்சையின் போது லென்ஸின் சிறிய பகுதி ஏதாவது தங்கிவிட வாய்ப்புண்டு அச்சமயங்களில் ஊசியால் அவற்றை எடுத்துவிடுவார்களாம்.

கண்களைப் பொறுத்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிறிய குச்சி குத்திவிட்டால்கூட பார்வையை இழக்கின்றநிலையை நர்ம்அடைந்து விடுவோம். ஏனெனில் கருவிழி ( Cataract ) குச்சியால் அதில் உள்ள பக்டீரியாக்கள் கருவிளியையே நாசம் செய்து விடுகின்றன. பெரும்பாலும் நாற்பதிலிருந்து ஐம்பதுவயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் "காட்ராக்ட்" வருகின்றது.

முக்கியமாக வைட்டமின் "ஏ" மற்றும் இதர வைட்டமின்களின் குறைபாடில்லாமல் பார்த்துக்கொண்டால் கண்களில் கோளாறு ஏற்பட வர்ய்ப்பில்லை.

இதற்கு பச்சைக்காய்கறிகள் பால், முட்டை, மர்ம்பழம், பப்பாளிப்பழம், மீன் போன்ற உணவுகள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கண்களின் விழித்திரை ( Retina ) மிகவும் முக்கியமானது. ஏனெனில் விழித்திரை பாதிக்கப்பட்டால் வைத்தியம் செய்வது அவ்வளவு சுலபமல்ல செலவும் அதிகமாகும்,

"காட்ராக்ட்" அறுவைச் சிகிச்சை கூட உடல் பரிசோதனைக்குப் பிறகே செய்யப்படுகிறது. அதிகமாக பழுத்துவிட்டன ஹைபர் மெட்சூர் ( Hiyper Mature ) காடராக்ட் அறுவைச் சிகிச்சை செய்வது சற்று சிரமம். அச்சமயங்களில் லென்ஸ் வீங்கிவிடும் (Bulging) இதனால் (Intraocular) ரென்சன் அதிகமாகி கண் சிவந்து வலி அதிகமாகி குமட்டலுடன் வாந்தியும்வந்து நரம்புகளைக் கொடுத்துவிடும்.

நன்றி : சுமங்கலி

## குணம் தரும் மருந்து

காலையில் குளிப்ப தாதே
கண்ணொளி பெருகும் என்றும்
வேலையில் சுறுசுறுப்பாம்
விலகுமே தீய சோம்பல்.
அழுக்கினைப் போக்குதற்கும்
அசதியை நீக்குதற்கும்
குளிப்பதைத் தவிர வேறொர்
குணந்தரும் மருந்தும்
உண்டோ ?
நாடொறும் தலையும் மூழ்கி
நன்கு நீ குளித்து வந்தால்
தேடியே நலங்கள் வந்து
சேருமாம், இன்ப முண்டாம்.

தொகுப்பு : க. கனகராசா

## நன்றாகத் தூங்குங்கள் !

பரீட்சைக்கு முதல்நாள் இரவு அதிகநேரம் கண்விழித்துப் படித்தால் பரீட்சை எழுதும் திறனைக் குறைத்துவிடும். நல்ல தூக்கத்தின் பின் மூளையின் அணுக்கள் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன. எனவே நன்கு திட்டமிட்டு பரீட்சைக்கு முன்பே படித்துவிட்டு முதல்நாள் நன்றாகத் தூங்குங்கள். அது சுறுசுறுப்பாக பரீட்சை எழுத வைக்கும்.

## இலங்கையில் கல்வி அறிவு வீதம்

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 1881 | 29. 8 வீதம் | 3. 1 வீதம் |
| 1921 | 56. 4 ,, | 21. 2 ,, |
| 1946 | 70. 1 ,, | 43. 8 ,, |
| 1953 | 75. 9 ,, | 53. 6 ,, |
| 1963 | 79. 3 ,, | 63. 2 ,, |
| 1971 | 85. 6 ,, | 70. 9 ,, |
| 1981 | 91. 1 ,, | 83. 2 ,, |

ஆதாரம் :- Fertility Decline in Sri Lanka Pic Publications 1990 - 1992

## தமிழ் சமயத்தின் பெயரன்று

சைவசமயத்தை தமிழ்ச் சமயம் என்றும், சைவசமயக் கோயிலைத் தமிழ்க் கோவில் என்றும் அறிவில்லாத ஜனங்கள் மூங்குகிறார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று ஒரு பாஷையின் பெயர்.

## அன்பானவாசகர்களே !

ஐக்கிய தீபத்தில் வெளிவரும் செய்திகள், மற்றும், கதை, கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம். எழுதி அனுப்புங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா ?

★ ஜிம்பாவே நாட்டில் இருந்து செனகல் நாட்டிற்கு யானைகளை ஏற்றுமதி செய்கிறார்கள். ஏன் தெரியுமா ? இந்த யானைகள் வயல்களில் புகுந்து பயிர்களை அழிப்பதால்.

★ ஆஸ்திரேலிய ரிசர்வ் வங்கி ஏ. யு. டி. 10 பாலிமர் நோட் என்றபெயரில் காகிதபணத்திற்குப்பதிலாக பிளாஸ்டிக்கில் அச்சடித்து வெளியிட்டுள்ளது. நீண்டகால பாவனைக்காக ஆஸ்திரேலிய அரசு இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

★ உலகிலேயே மிகப்பெரிய குரங்கு நேபாளத்தில் சீதை பிறந்த ஊரான ஜனக்புர்தாம் என்னும் இடத்தில் உள்ள அனுமார் கோவிலில் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் ஒரு மீற்றர் எடை 5 கிலோ இக் குரங்கு மேலும் வளரும் என கூறுகிறார்கள்.

★ வளைகுடாப்போரில் அமெரிக்காவும், அதன் கூட்டுநாடுகளும் இணைந்து ஈராக்மீது குண்டுமழை பொழிந்ததால் குண்டுகளில் இருந்து வெளிவந்த கதிர்வீச்சினால் ஏராளமான குழந்தைகள் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று கனடா டாக்டர் ஒருவர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

★ கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 60 வயதான ஸ்ரீதர் மல்காஜிசியால் 42 வருடங்களாக தனது கைவிரல் நகங்களை வளர்த்து உலகசாதனைப் புத்தகமான 'கின்னஸ்' பதிவேட்டில் தனது பெயரைப் பதிவுசெய்துகொண்டார். இவரது இடது கைவிரல் நகத்தின் நீளம் 143 அங்குலம்.

★ நாய் இறைச்சிக்குப் பெயர்போன சீனாவின் மத்திய நகரமான நான்சென்னில் பூனை இறைச்சிக் கடைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் பூனை இறைச்சிக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளதால், பூனைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறதாம்.

## கூட்டுறவு இயககப் முக்கிய ஆண்டுகள்

1966-ல் இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.

1968-ல் கூட்டுறவு சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய லெயிட்லோ தலைமையில் ஆணைககுழு நியமிக்கப்பட்டது.

1971-ல் தேசிய வீடமைப்புச் சங்கம் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

1972-ல் இலங்கை கூட்டுறவு சம்மேளனம் புனரமைக்கப்பட்டு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுசபை உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

1973-ல் இலங்கை கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம் ஒனறு உருவாக்கப்பட்டது.

1976-ல் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

1978-ல் கூட்டுறவு புனரமைப்புக்கு தேவநாயகம் குழு நியமிக்கப்பட்டது. கூட்டுறவு விசேட ஏற்பாடுகள் சட்டம் ( இல 12 ) நிறைவேற்றப்பட்டது.

1979-ல் உணவுப் பங்கீட்டு முறை ஒழிக்கப்பட்டு உணவுமுத்திரை திட்டம் அமுல்செய்யப்பட்டு உணவுமுத்திரைக்குப் பொருள்வழங்கும் நிறுவனமாக பல. நோ. கூ. சங்கங்கள் நியமிக்கப்பட்டது.

தொகுப்பு ; சுஜித்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத கண்டனப் பேரணி!

## வெகுஜன அமைப்புக்களின் கோரிக்கையாக மகஜர் கையளிப்பு !

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதிலும், எமது பிரதேசங்களின் இயல்பு வ ழ்க்கை நிலையைத் தோற்றுவிப்பதில் பின்னடிப்புச் செய்வதைக் கண்டித்து கடந்த சனிக்கிழமை யாழ். நகரில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பிரமாண்டமான மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தியது.

எழுச்சி மிகு இப் பேரணியில் பல்வேறு அமைப்புக்களுடன் கூட்டுறவாளர்களும் ஆயிர்க் கணக்கில் கலந்து கொண்டு தமது கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

பேரணியின் பின் பொருளாதாரத்தடையை தமுற்றாக நீக்கி உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி தென்னிலங்கை விலையில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும்; பூநகரிப்பாதை சுதந்திரமான மக்கள் போக்வரத்துக்காகத் திறந்துவிடவேண்டும் என்றும்; இராணுவம் ஆக்கப்பற்றிய இடத்திலிருந்து விலகி இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்றும்; காலவரையின்றி யுத்தநிறுத்தும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்; கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக, அச்சமின்றி தொழிலில் ஈடுபட வேண்டுமென்றும்; வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்; சமாதானப் பேச்சு வார்த்தைகளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும்; மற்றும் கோரிக்கைகள் அடங்கி மகஜர் ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப் பிரதி நிதி, யாழ். மேலதிக அசர அதிபர் வாசுதேவநாண யக்கார ஆகியோரிடம்கையளிக்கப்பட்டது.

## சிறந்த சேவை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இயங்கும் அடம்பன், நானாட்டான், உயிலங்குளம், திருக்கேதீஸ்வரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணப்பொருள் மற்றும் உணவுப் பொருள்கள் விநியோகத்தை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருவதாக நானாட்டான் பல நோ, கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். மரியாம் பிள்ளை தெரிவித்தார்.

## கூட். கருத்துக்களை வெளிப்படுத்துகிறது

கூட்டுறவு அடிப்படையில் கூட்டுறவாளர்களினால் ''ஐக்கிய தீபம்'' மீண்டும் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இடையில் சிறிது காலம் ஐக்கிய தீபம் வெளிவராமல்தடைப்பட்டமை துரதிஸ்டமே''

நல்லூர்பிரதேச செயலரும், பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி கமலா, சிவசிதம்பரம் ஐக்கிய தீபம் வெளியீட்டு விழாவில் இவ்வாறு கூறினார்.

நல்லூர் பல நோ கூ. சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திருமதி கமலா, சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில்;

'ஐக்கிய தீபம்' கூட்டுறவுக் கருத்துக்களுடன், மக்களுக்குத் தேவையான செய்திகளையும், பொழுதுபோக்கு, அறிவியல் அம்சங்களையும் தாங்கி வருவதினால் மக்கள் மட்டுமன்றி, பாடசாலை முதல் பல்கலைக் கழக மாணவர் வரை பயன்படுத்தக்கூடியதாகஇருக்கிறது. என்று கூறினார்.

''ஐக்கிய தீபம்'' இதழை திருமதி. க. சிவசிதம்பரம் வெளியிட பொதுமுகாமையாளர், செல்வி த. பேரம்பலம் பெற்றுக்கொண்டார்.

உபதலைவர் திரு. க. பரமசாமி, கூட்டுறவு அலுவலர் திருமதி. கோ. திருநாவுக்கரசு, யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கல்வி உத்தியோகத்தர் திரு. இ இரத்தினதாசன் நன்றி கூறினார்.

## விவசாய சமாசம் நடவடிக்கை

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 500 மெற்றிக் தொன் பொருட்களை கப்பலில் கொண்டுவர ஏற்பாடு செய்துள்ளது.

பால்மா, சவர்க்காரம், மல்லி, பருப்பு, பற்றரி, கால் நடைத்தீவனம், இயந்திரங்கள், பிடவைகள், மற்றும் நானாவித நுகர்ச்சிப் பொருட்களையுமே கப்பலில் கொண்டு வரவுள்ளது.

## 50 மாணவர் அனுமதி

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இவ்வாண்டுக்கான கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர் பிரிவு 9 மாதங்கள் பயிற்சி நெறிக்கு 50 மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் 14 பேரும், வெளிவாரியாக 36 பேரும் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பயிறசிகள் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

## மக்கள் தேவையறிந்து செயற்படுகிறார்கள்

''இன்றைய போர்க்கால சூழ்நிலையில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கு கூட்டுறவு முறையிலான வெதுப்பகங்கள் அவசியமாகும். வெறுமனே உணவுப் பொருள் விநியோகத்துடன் மட்டும் நில்லாது, வலி கிழக்கு (தென்பகுதி) பல நோ. கூ. சங்கம் முதலில் ஓர் சுவையகத்தையும், இப்போது வெதுப்பகம் ஒன்றையும் ஆரம்பித்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு கோப்பாய் பிரதேச செயலரும் பிரதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திரு. க. கேதீஸ்வரன் கோப்பாய் வடக்கில் வெதுப்பத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. சி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவாளர் திரு க. கி. குமாரசாமி உட்பட மற்றும் பலர் உரையாற்றினாாகள்.

## புலமைப் பரிசில் வழங்க தீர்மானம்

1994-ம் ஆண்டு நடைபெற்ற 5-ம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும், க. பொ. த. உயர்தர பரீட்சையில் அதிவிசேட சித்திகள் பெற்று மாவட்ட ரீதியில் முன்னிலையில் உள்ள மாணவர்களையும் பாராட்டிபரிசில்வழங்கி ஊக்குவிக்க நல்லூர் பல நோ கூ. சங்கம் தீர்மானித்துள்ளது.

இவ் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் சங்கத்தின் அங்கத்தவர்களாகவுள்ள பெற்றோரின் பிள்ளைகள் பரிசில் பெறத் தகுதியுடையவர்களாவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடமும் 5-ம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்களல்லைக்குட்பட்ட மாணவர்கள் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### 10; 5சத நாணயங்கள்

தற்போது புழக்கத்தில் இருந்துவரும் 10சத 5சதநாணயங்கள் செல்லுபடியாகும் என மக்கள் வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள வர்த்தகர்கள் இந்நாணயங்கள் தற்போது செல்லுபடியாகாதென கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

## விற்பனை நிலையம் திறக்க எதிர்ப்பு

சங்கானை பல நோ. கூ. சங்கம் தொழிற்படும் எல்லைப் பரப்பிற்குள் வர்த்தகத் திணைக்களத்தின் விற்பனை நிலையக் கிளை ஒன்றினைத் திறப்பதற்கு சங்கத் தலைவர் திரு. வை. செந்திநாதன் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மாதாந்த இணைப்புக் குழுக் கூட்டத்தில் இக்கிளை நிலையம் திறப்பது சம்மந்தமான விடயம் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போதே தலைவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. சங்கம் அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கொன்றை மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலையில் அண்மையில் நடாத்தியது.

யாழ். மா. கூ. சபையும் யாழ். மா. வி. கூ. ச நு. சங்களின் சமாசமும் இணைந்து நடாத்திய இக்கருத்தரங்கில் கூட்டுறவுக்கல்லூரி அதிபர், கல்விப்பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர், யாழ். விவசாய உதவி பிரதிப்பணிப்பாளர், உடுவில் விவசாய போதனாசிரியர் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

## ஆணைக்குழு நியமனம்

கடந்த காலங்களில் அரசியல் ரீதியாக பழிவாங்கலுக்குள்ளான கூட்டுறவு ஊழியர்களின் முறைப்பாடுகள்குறித்து விசாரணை செய்வதற்கு மூவர் கொண்ட ஆணைக்குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளதாகவும், ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கூட்டுறவு மாகாண சபைகள் பிரதி அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

## சிறுவர்பாடசாலைஆரம்பம்

சுன்னாகம் பனை தெ. வ. அ. கூ. சங்கம் இவ்வாண்டு பின்தங்கிய பிரதேச மக்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு மல்லாகம் கோட்டடி, ஏழாலை, ஈவினை, கல்லாரை ஆகிய இடங்களில் 4 சிறுவர் பாடசாலைகளை ஆரமபித்துள்ளது.

இதேவேளை சிறுவர் போஷாக்குத் திட்டத்தின்கீழ், மேற்படி பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு வழங்கும் வைபவம் அண்மையில் சங்கத் தலைவர் திரு. தே. மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது. பொதுமுகாமையாளர் திரு. ஜே. பி. குணரத்தினம் சிறுவர்களுக்கு போஷாக்கு வழங்கி ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவில் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### மதியஉணவு முத்திரை

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாததால் மாணவர் மதிய உணவு முத்திரை மே மாதத்திற்குப் பின்பு வழங்கப்படமாட்டாதென தெரியவருகிறது.

இதேவேளை இவ் வருடம் மார்கழி மாதம் வரையிலான மதிய உணவு முத்திரை யாழ். செயலகத்திற்கு ஏற்கனவே வந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## விளம்பர அன்பளிப்பு

★ வடமராட்சி ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
திக்கம் - அல்வாய்

★ தென்மராட்சி ப. தெ. வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
வரணி.

★ காரைநகர் பல நோ. கூ. சங்கம்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

★ வடமராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்கம்
மருதங்கேணி.

★ வலி - கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நீர்வேலி.

### மாவட்ட ......

புதுவருட உத்தியோகத்தர்களாக தலைவர் திரு. வே. பேரின்பம் உபதலைவர்கள், திரு. ஆர். எ. டி. கருணரட்ணா திரு, என். எம். அலி செயலாளர் திரு. ஆர். குருகுலசிங்கம், உபசெயலாளர் திரு. கே. எம். சேமகரன் பொருளாளர் திரு. ரி. விவேகானந்தன், உப பொருளாளர் திரு. எம். ஆனந்தராசா, நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு, எம். ஐ. எம். உசனார், திரு. எம். எ. எம். பரீத், திரு. எ. மரியாம்பிள்ளை திரு. பொ. கணேசலிங்கம் ஆகியோரும் திரு. ஜீ. கேதீஸ்வரன் யாழ்ப்பாணம், திரு. கே. சிறீஸ்காந்தராசா கிளிநொச்சி, திரு. ஏ. மரியாம்பிள்ளை முல்லைத்தீவு திரு. ஏ. பத்மனாதன் வவுனியா ஏ வி. மரியநாயகம் மன்னார், இரஞ்சினி செல்வராசா திருமலை, திரு. எ. எம். எம். அலியா மட்டக்களப்பு திரு. எம். சுலைமான் கல்முனை, திரு. ஆர். எ. டி. கருணாரட்ண அம்பாறை ஆகியோர் மாவட்ட இணைப்பாளர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## புட. நெசவாளர்சங்கம்வேண்டுகோள்

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூ. சங்கம் தனது நடைமுறை மூலதனமாக 15 லட்சரூபாவை மக்கள் வங்கியிடம்கடனாகப் பெற்றுத்தருமாறு யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் சங்கத்தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மக்கள்வங்கி அதிகாரிகளுடன் இது சம்பந்தமாகபேசி ஒழுங்கு செய்வதாக அரச அதிபர் கூறியுள்ளார்.

### நிழற்படபிரதி சேவை

குறைந்த கட்டணத்தில் ''நிழற்பிரதி சேவை'' ஒன்றை ஆரம்பிக்க யாழ். மா. விவ. உற். சந். நுக. கூ. சங்க சமாசம் சுமார் 2 லட்சரூபா செலவில் நிழற் பிரதி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்யவுள்ளது.

### புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்க ஊழியர் தொழிற் சங்க நிர்வாகிகள் வருமாறு;

தலைவர் திரு. கு. கோபாலசிங்கம், உபதலைவர், திருமதி ம. அஞ்சலா, செயலாளர், திரு. சு. சோதிரூபன், உப செயலாளர் செல்வி வெ. வசந்தி, பொருளாளர் திரு. ந. ஆனந்தராசா ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் மாசி மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org